7
1 APR 1946 MADRAS

பிஸ்மில்லாஹி.

சீதக்காதி
அனாதை
ஆசிரம நிதி
காயலபட்டணம்

கொடைவள்ளல் சீதக்காதி

அனாதை ஆசிரமத்தின்

1-வது வெளியீடு.

சன்மார்க்க சாகித்யாலங்காரம்

இஃது

காயல்பட்டணம், மஜ்லிசுல் கௌதோர் ஆதரவில்

பாவலர். S. S. அப்துல் காதிர்

அவர்களால் இயற்றப்பட்டது.

...ன் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது

1946.

[ரூபா. 1—0—0

Δ
N46
68080

பிஸ்மில்லாஹி.

கொடைவள்ளல் சீதக்காதி

அனாதை ஆசிரமத்தின்
1-வது வெளியீடு.

சன்மார்க்க சாகித்யாலங்காரம்

இஃது
காயல்பட்டணம், மஜ்லிசுல் கௌதோர் ஆதரவில்

பாவலர். S. S. அப்துல் காதிர்
அவர்களால் . இயற்றப்பட்டது.

சென்னை, கனன் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.
1946.

இதன் விலை] [ரூபா. 1—0—0

முன்னுரை.

அன்புமிக்க சோதரீர்!

எத்தேசத்தினும் சிறப்புற்றோங்கிய நந்தமிழ் நாட்டின்கண் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்துவந்த மக்கள் மகா பாரதம், இராமாயணம், போன்ற கதாலங்காரங்களையும் கெடுதல் சிற்றின்பங்கள் மலிந்த செய்யுள்களையும் செவியுற்றும் பாடியும் பரவசமடைந்து வந்தார்கள். அக்காலத்து முஸ்லீம்களும் அதில் ஆர்வம் கொண்டிருந்தபடியால் நம் கொடைவள்ளல் சீதக்காதி அவர்கள் அக்குறையை நிவர்த்திப்பான் வேண்டி இராஜகவி உமர் புலவர் அவர்களைக்கொண்டு நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் திரு ஜீவியச் சரிதையை தமிழிற் பாடச் செய்து சீரா புராணமெனும் பெயரையும் அதர்க்குச் சூட்டி இஸ்லாமிய மக்களை இன்புறச் செய்தார்கள்.

68080

நவீன நாகரீகம் நடனமாடு மிக்காலத்தில் நாடகம், சினிமா, கேளிக்கைகளிற் பாடப் பட்டுவரும் ஆபாசங்கள் நிறைந்த அனேக பாடல்களை மாந்தர்கள் ஆனந்தமாய்ப் பாடி மகிழ்வதை நாம் இன்று கண்கூடாகக் காண்கின்றோம் இக்குறையை நிவர்த்தி செய்யவேணு

மென்ற பெரும் நோக்கத்தோடு காயல்பட்டணம் மஜ்லிசுல் கௌதோர் இச்சிறிய பாடல்களை இயற்றித் தரும்படி எம்மை கேட்டுக்கொண்டதர்க் கிணங்க வள்ளலின் றிருப்பெயரால் நிறுவியுள்ள சீதக்காதி அனாதை ஆசிரமத்தின் முதல் வெளியீடாக சன்மார்க்க சாகித்யாலங்காரமெனும் இச்சிறிய பாடல்களை எனது சிற்றறிவிற் கெட்டியவாறு பாடத் துணிந்தேன், மகா மேதாவிகளாகிய தீபச் சுடர்களின்முன் மின்மினிப் பூச்சிக்கொப்பாகிய நான் அன்பர்களின் அவாவை பூர்த்தி செய்யும் பொருட்டு பாடத் துணிந்த இப் பாக்களிற் பிழை பல விருப்பினும் 'மைந்தனின் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழுறும் மாதாபிதாக்களைப் போன்று' மன்னித்து ஆசீர்வதிக்குமாறு வேண்டி நிற்கும்,

தங்களன்புள்ள

பாவலன்,

காயல்பட்டணம்,
25-3-46.

எஸ். எஸ். அப்துல் காதிர்.

N46

1 - APR 1946
MAD

பிஸ்மில்லாஹி.

குறள் வெண்பா.

அருளொடு அன்பும் அளவிலா உண்மைப்
பொருளை பணிந் திசைப் பேன்

விருத்தம்.

கதிரவ னென் றுதித்துக் காரிரு ளெல்லாம்போக்கி
கதிர்கனி காய்பூக்கெல்லாம் கூடியளித்தாபோல் மக்கட்
பதிநபி யுல்லாபாதம் பணிந்திஞ்ச கூறுமென்றன்
துதிகளுக் கவர்பொருட்டால் தூயனே காப்புத்தானே

வெண்யா.

ஞானத் தகைமிகுத்த நாதாக்கள் தாம்பணியும்
தானம் எனக்குமருள் தாயகமே—கோனுமது
நாட்டப் படிதந்தான் நல்முஹ்றயித் தீனொலியென்
பாட்டிற் பழி யுறாது கார்

வெண்பா.

சீருண்டாம் நல்ல சிறப்புண்டாம் செல்வமிகும்
பேருண்டாம் பேரின்பப் பெட்புமுண்டாம்-மேருலகில்
நல்லமுஹி யித்தீன்நா தர்மீலா தேகவ்திற்
குள்ள மகிழ்ந் தேயுகவி னால்

28-வது மேளம்

இம்—ஆந்தோளிகா தாளம்—ஆதி

ராகசுதாரசா என்ற மெட்டு

பல்லவி

லோக மனைத்தையும் ஆக்கி ஆதரித்தோனே
அன்னையிலு மன்புடையவனே (லோ)

அனுபல்லவி

மாபுகழ் யாவும் அருளாளனென உனக்கே (லோ)

சரணம்

(1) புவியினி லாளும்புர வலர்க்கு மெல்லோர்க்குமிறை
அவனியழிந்த இறுதி நாளைக்கும் நீயேதுரை (லோ)

(2) சதாஉனைப் பணிகின்றோம் சகாயமும் தேடிநின்றோம்
அசடர்வழியை விட்டுன் அன்பர்பாதை தந்தாள்வாய்
(லோ)

(3) செழுந்தமிழ் ஆந்தோளிகா தென்கவியாலுன் புகழ்
செய்கப்துல் காதிர்செய்தான் சேமமவர்க்கு மருள்
(லோ)

இம்—இர்துஸ்தான் தாளம்—ஏகம்

பிரமன் எழுத்திஞல் என்ற மெட்டு

பல்லவி

ஜெய மனித்தான் றவக்கிரீடன்
ஜெகமாந்தருாமுற நாளும்
தண்டலேசூழ் ஜயிலான கருதையன்
தயாகரன் சுகுமாரன் (ஜெ)

அனுபல்லவி

நேராம் ஹிஜரென் பதுவைந்தோடெழு
பத்தொராயனத் தவதரித்தே
நம்பிடுவோர்கட் கருண்மா முகிலாய்
நாராதாரை மிசை யன்பாய் (ஜெ)

சரணம்

(1) லோகரட்சகர் சுதையான ஸ்ரீமாட்டி
கண்மணியான குமாரன்
தியாகசுசீலன் ஹஸனர் கோத்ரன்
திகழ புசாலிஹின் சேயன்
சோபிதானன குபன்—மிகு (ஜெ)

(அனுபல்லவி எடுப்பு)

(2) கலேபயி லார்வமிக வாயாரடி
பணிந்தவராசியைக் கோர
அலேஎனத்தாரை யதில்நீர் பாய
அருட்செய்தா ரகமகிழ்ந்தே (ஜெ)

(சரண எடுப்பு)

(3) தேனெழுகும் கனியே மறந்தேனும்
ஓர்சடமும் முரையாதீர்
கோனருளோங்கும் பகுதாதினிற்போய்
கோரின சிதமதிற் றேறென்
ரோதிஞர் மகனர்கே—மிகு (ஜெ)

(அனுபல்லவி எடுப்பு)

(4) மாதா விடத்திற் சிலபொருளை மகி
பர் முகிய்யிதீனொலி பெற்றே
மங்களவாசி யுடனே தீரன்
மகா ககனவதிசென்றே (ஜெ)

(சரண எடுப்பு)

(5) வாதுசெய் கரவர் கோனேதுளவெணநம்
மாதவராணைகண்டே
பாதகரஞ்சி பணிந்திட இஸ்லாம்
பகர்ந்தநற் பதவிக டைந்தோர்
பகுதாதுறையும் புநீதன் (ஜெ)

(அனுபல்லவி எடுப்பு)

(6) நல்லோர் பல்லாயிரங் கோடிநவின்
றதிலனு வடிமையும்பாடி
சல்லியந்தீர சௌக்கிய முன்னேற
சதாசிதம் தரும்போதன் (ஜெ)

(சரண எடுப்பு)

(7) செய்கப்துல்காதிர் செந்தமிழ் மலர்ச்சோலை
செழிப்புறச் செய்யுமுதாரன்
சேவடி போற்றும் மஜ்லிசுல்கவுதினை
சிறப்பித் துதவிய நல்லோர்க்கும்
சேமமருளும் சகாயன் (ஜெ)

28-வது மேளம்

இம்—ஹரிகாம்போஜி தாளம்—ஆதி

நானுனதடிமையன்றோ என்ற மெட்டு

பல்லவி

நீரல்லாதுலக முண்டோ நபியே (நீ)

அனுபல்லவி

பாரினில் மன்னிய பயகாம்பர் யாவர்க்கும்
பதியெனப் பதிவிகொண் டுதித்த முகம்மதுவே (நீ)

சரணம்

(1) மோட்ச வாசலிலும் மாட்சியாம் காம
காட்சியை ஆதம் கண்டதனுற் பவ
மீட்சியுற்றே புகழ் யாவும் பெற்ருருயர்
ஆட்சிக்குரிய நபி யான முகம்மதுவே (நீ)

(2) கோரமலைகள் போல் மீறிய அலைகள்
கொந்தளித்திடு மிந் தோடிய பொழுதில்
கூறிடும்நூஹு நன் நபிக்கும தருளால்
இறையுதவிய திரு மறைசொல் முகம்மதுவே (நீ)

(3) தகித்திடும் பெருந்தீ தனை இபுருஹீம்
சகித்திட குளிராய் சமைந்ததும் பொருட்டால்
செகத்திலருள் கொடையாய் செனித்தநல் மணியே
செய்கப்துல் காதிர்க்கிட முதவு முகம்மதுவே (நீ)

28-வது மேளம்

இம்—கமாஸ் தாளம்—ஆதி

வினதாசுத என்றமெட்டு

பல்லவி

மன்னவா...இதுவே...ஊசீ...முன்வரவேண்டும்
மீ...ண்டும் வரந்தர (மன்ன)

அனுபல்லவி

முன்னமொ...ரு போதுமுதவி
என்னையாண்டாய் மகராஜ பூஜித (மன்ன)

சரணம்

(1) அமலம் எழில்வே தழகொளிற் பதிகாவறிர்
உமரொலி யின்றவ பயனுகிய கோ
ளமுமா தவயோ கமுமுயர் கருணு
கமமே நின்னும னுவப் கினுக்கிதம்தர

(சிட்டாஸ்வரம் இதை அடிகடோறும்பாடு)

பதநிஸ்ாநி தநிஸ்ஸீத பமகரிஸ
மகரிஸநி ஸரிகமபா
காமபதநீ தபம பதநிநிஸ்
ம்க்ரிஸ்நி தநிஸ்ரிஸ்
ரீஸ்நித நீதபம கரிஸநிஸ
ரிகமகரி ஸரிகமப
ஸ்நிதபமப கமபதநிஸ்
ரிஸ் ஸ்நி நித ஸ்நிதபம (மன்ன)

(2) அரிவைக் கோர்நல்வி மிருமக உறவரம்
அருளிய செய்கப்துல் காதிரெனும் பேர்
ஒரு போதிலும் மனதில் மறகாதோன்
திரு ஓங்கியேவிரு நிதிதர விதுகதி
சிட்டாபாடிப்பின் (மன்ன)

1 - APR 1946

29-வது மேளம்

இம்—சங்கராபரணம் தாளம்—மிஸ்ர சாப்பு

என்னிலுமவனென்ன வ்லாகர்யமா என்றமெட்டு

பல்லவி

சொல்லுவீர் நமக்கிறைவ னொருவ னென்றே
உள்ளத்தில் உண்மைகொள்ளுவீ ரவனன்றி
இல்லை என்றே (சொ)

அனுபல்லவி

அல்லுபக லென் நேரமு மவனே
ஆனந்தமா யடி யார்கள் வேண்டிடும்
ஆதிநாயகனே ஆதாரமுடனே (சொ)

சரணம்

ஆதியந்த மில்லாத அருட் கொடையோன்
அன்னைபிதா மற்றெவரு மற்றவனென அன் புடையோன்
ஓதஉவமை இல்லாத அழ குடையோன்—செய்
கப்துல்கா திர்கீத மோதிடும் கீர்த்திக்குய ருடையோன்
—கிருபையுடையோன் (சொ)

28-வது மேளம்

இம்—கமாஸ்

தாளம்—ரூபகம்

விக்னேஸ்வராஸ்ரீ என்றமெட்டு

பல்லவி

மக்காஸ் தலம் போலுண்டோ பெரியது—தவ
மிக்கோர் திக்கோர் சொற்கோர் செலுந்திருப்பதி (மக்)

அனுபல்லவி

எக்காலு மிதி லெக்காகும் பாவ
முக்காலும் போம் நமக்காகிய திருப்பதி (மக்)

சரணம்

(1) ஹக்கன் அருளிய மனையென ஓங்கும்—திருகஃபா
வைக்கண் டவர்க்கிலை யாதொருதீங்கும் ஜெயமோங்கும்
பக்கங்களிலே பலவித துக்கங்களைத்தீ ரெனவேமு
ளக்கம்முற அடிபடுமிடி சொக்கம்பெற அளித்திடுந்
திரு (மக்)

(2) எண்ணிற்றொலையா தபசிகள் கூட்டம்—இறைமந்திரம்
பண்ணிப்பலமுறை புரிவர் தொங்கோட்டம்செயலது
வரும்
மண்ணிற்பிணியும் பெருமலை தன்னிற்
கிணையாம்வினைகளும்
மணிமாதவரலி மாதுலரளியா லகன்றிடுந் திருப்பதி (மக்)

(3) அந்தந்தயை சிந்துங்குடி தேடி—திருமதினு
வந்தும்பத விந்தம்பெற நாடி—இதைநவில்
சொந்தன்சாகிபு தம்பியின் மைந்தன் செய்கப்துல்
காதிர்முன்
வரவேண்டுமென்நபி இருநிதி தரவேண்டினே னுன
திருப்பதி (மக்)

28-வது மேளம்

இம்—உமாபரணம் தாளம்—ஆதி

நிஜமர்மமுலனு என்றமெட்டு

பல்லவி

பூமலர்ச் செறியுறும் புனிதர்கள் வாழ்கிரு
ஞானசம் பாவன நாடா ளுங்கோனே (பூ)

அனுபல்லவி

சோமனின் நீமமுன் சுடர்முன் னுருமோ
சோபிதானனு தந்தா ளுந்தாளென் றேளின்மீதினிற் (பூ)

சரணம்

(1) கனிகாய்பல தான்ய விநோத—தேம்பயி
ரோங்கிய பூமி தேவா மிர்த
மணிமகு டாதிபர் பணிபதீ தாதுறை
மாதவர்க் கதிபரான மாமுஹிய்யித் தீனே (பூ)

(2) பல்லாண்டுமுன் மாண்டோர் மாமரக்—கலத்தொடு
பொருள்களு மேவி மீண்டும் வர
பரிவுடன் விருத்தை மகிழ மேலோனிடம்
பாவனை புரிந்திரந்து பாரிலீந்த தாயக (பூ)

(3) மஜ்லீசுல்கௌ தோர்கள் மகிழ்ந்து—போற்றிய
மாசிதியான வரிதியே
மதுரத்தமிழ் மணம் கமழ் பூங்காஹிரில்
வாழும்செய் கப்துல்காதி ரென்னாளும் வாழ்கநீயருள் (பூ)

28-வது மேளம்

இம்—பகுதாரி　　　　　　　　　　　　தாளம்—ஆதி

புரோவ பாரமா என்றமெட்டு

பல்லவி

தருண மீதையா தயை செய்வாய்
தமிய நானுந்தன் றனைய னன்றோ　　　　(தரு)

அனுபல்லவி

கருணை கடாக்ஷ கடலே மோக்ஷ
　　கனியே வினைதீர் நாளி தேவா　　　　(தரு)

சரணம்

தவமோங்கும் காஹி ருமரொலி ஈன்றசுதனே
　　தைகா சாஹிபே...
கவிசெய் கப்துல் காதிருன்னாம னுன்னும்
கலிதீர்த் தாளவே நாதா நீவா　　　　(தரு)

20-வது மேளம்

இம்—ஆனந்தபைரவி தாளம்--ஆதி

நீமதிசல்லக என்றமெட்டு

பல்லவி

தேடுகிறேன் நித்தம் காவல் உன்னிடம்
காருண்யா அ , , ஆஅஆ , , காத்தருள் மன்னவா (தே)

அனுபல்லவி

சாரும் கார் நிசியின் நேரமுறும்
தீவினையாவும் தீர்த்தாள இறைவா என்னாளும்

(சிட்டா இதை அடிகடோறும் பாட)

பதபஸ்ாஸ் பஸ்நித பமகரி ஸநிஸா மகரிகம பதமபகரிகம
பதநிபாத மபகம கதபமகரி ஸகரி காமபம கரிககமா
நீஸமகரி கமபதமப கரிகம பஸ்நிஸ்ாநிஸ்க்ரி ஸ்ரிஸ்நீ
ஸ்க்ரி க்ாம் க்ம் க்ரிஸ் க்ரிஸ்நிதப ரிஸ்நிதப தாபமகரி
ஸகரிகம (தே)

சரணம்

வைகறைக்கும் நீ படைப்பெவைக்கும் நீ
வல் , , லோனும் நீ விதித்தவையால் விளையும்
பொல்லா வினைகு தெல்லாமறப் புரிவாய் நீ
சொல்லும் செய்கப்தில் காதிரை யன்போடாளும் தேவ
சிட்டா ஸ்வரம் (தே)

28-வது மேளம்

சாயாஸ்வரம்

இம்—செஞ்சுருட்டி தாளம்—ரூபகம்

எங்கும் நிறை நாதபிரம்மம் என்றமெட்டு

பல்லவி

எங்கள் நயினார்முஹம்மத்
அண்ணலின்நன் னாளிதுவே (எ)

அனுபல்லவி

(1) தேனம்ருதமொழுகும் வசன ஞானோதய வதன
கோனருளிய சன்மான மானராஜரான (எ)

(2) காமம்கொலை களவஞ்ஞான குரோதம் நிகழ்காலம்
பாவக்கருள் நீக்கவந்த பாக்யராஜரான (எ)

(3) சேமம்நிதி வளரும்காஹிர் வாழ்செய் கப்துல்காதிர்
செய்யுந்தமிழ் பாமாலைக் கருளும் ராஜரான (எ)

N46

28-வது மேளம்

இம்—சாமா தாளம்—ஆதி

செல்வமேசுக ஜீவாதாரம் என்றமெட்டு

பல்லவி

ஐயன் பாதத்தை ஆசித்தோரே
அவனியில் பெரியோராம் பஃதாத் (ஐ)

அனுபல்லவி

செய்தவங்கள் யாவும் சேர்ந்தோ ருருவாய்
செகத்தினிலே அப்துல் காதிரைத் திருவாய்
மெய்யா மிஸ்லாம் மேவும் குருவாய்
மேலோனளித்த ஜீலானூராள் (ஐ)

சரணம்

மாசிலா மவுன யோகானந்தம்
வழங்கு முகிய்யித்தீன் காமப்ர பந்தம்
பேசும்செய் கப்துல் காதிருக் கந்தம்
காசினி லருளும் ராஜரா மெங்கள் (ஐ)

22-வது மேளம்

இம்—கரஹரப்பிரிய தாளம்—ஆதி

நடையலங்காரம் கண்டேன் என்றமெட்டு

பல்லவி

வயதுமூன்றான தின்றே—உயர்
மதிப்பும்நற் சிறப்பும்பொற் புயர்சபை யானநின் (வய)

அனுபல்லவி

வயல்நிறை பஃதாத் வளர்முஹி யித்தீன்
செயலடி யார்செவிக்குட் சுவைஎனத் தரும்நின் (வய)

சரணம்

மஜ்லிசுல் கௌதாய் வழஙகிடும் காஹிர்
மானகர்த் திருவே அருள் சுரந்து
வாழ்கநீ உதவிய மாந்த ரெல்லோர்களும்
வாழ்ந்திட செய்கப்துல் காதிரும் வாழ்க

(சிட்டாஸ்வரம்)

பா—நிதபம தபமக மகரி சநிஸ
। ஸரிகமப தநிதம பநிதப
நிதபம தபமக மகரி ஸநிஸ
ஸ்ரிகமப தநிதபமா பதநிஸ்
க்ரிஸ் நிஸ்ரீரீ ஸ்நிதபதநீநி
நிதப ரிகமாம மகரிகஸ
ரீரி காக மாம பாப தநிஸ்ரி
க்ரீஸ்நித நிநீதபம ககாரிகம (வய)

8-வது மேளம்

இம்—தோடி தாளம்—ஆதி

கோடினதுலு தனுஸ்கோடி என்றமெட்டு

பல்லவி

நாடினவரம்தர நாதா நின்திரு உள்ளம்
நல்கிடா தென்ன மர்மமோ நான்மனதில் (நா)

அநுபல்லவி

பாடிஎன் னாளும் பணியுமிச் சிடன்முன்
ஓடி ஓடிவந் துதவாற்ற லிலேயோ நான் (நா)

சரணம்

(1) தங்கட மெனும் பூதங்களி நாற்பல
சங்கடத் தாழ்தல் சம்மதமோ தேவரீர்
பங்கஜத் தாள்பணி செய்பவர்க் குந்துயர்
பாரிலாவ தழகாமோ பரிந்தென் மனம் (நா)

(2) உந்திருப் பெயரு வந்தெனைப் புனையச்சீர்
தந்தவ னுந்தவ மைந்தனன்றோ என்
சிந்தைம கிழ்செல்வப் பேறுடு வாழ்கநீ
தந்தைபோல் வந்தருள் தைகாசாஹி பென்மனம் (நா)

65-வது மேளம்

இம்—சாரங்கா தாளம்—மிஸ்ர ஜம்பை

நீவாட நீகான என்றமெட்டு

பல்லவி

ஆதார மார்தேவ அகிலலோ கலங்கார
அமிர்த வாசக சுபகுண — , , . , , (ஆ)

அனுபல்லவி

பாதார சேவைபுரி பக்தரிட மன்புநிறை
வேதாந்த மேதையர் கொண்டாடு மதிபூரண (ஆ)

சரணம்

(1) இல்லான் வந்துனைவேண்ட இலையென் றியம்பா
தென்றே
வல்லோ னின்றூத ருரைப்படியெ னுளம்கண்டே
இல்லாமை யோட்டித் திருஓங்கமகிழ்ந் தேவிரைந்து
உல்லாச மானசுக வாழ்வருள்செய் வாய்சதா (ஆ)

(2) சந்தாப மிற்சேம ஜீவதன மீஉதாரா
செய்கப்துல் காதிர்கவி மாலைக் கலங்காரா
தைகாசாகி புமரொலி கண்மணி யானசுதா
மெய்காவலா கமல பாதம் பணிந்தேநீதா (ஆ)

22-வது மேளம்

இம்—ஸ்ரீ ரஞ்சனி தாளம்—ஆதி

மாகுபல்க என்றமெட்டு

பல்லவி

பூரணம் பொலிந்த மாதேவா பூதசாரம் நிறை (பூ)

அனுபல்லவி

ஈர முளவே தாந்த சாகரமே
ஈடில்லா வமுதே—ஈடில்லா வமுதே (பூ)

சரணம்

(1) சேரனூரிறை வனேனுகியர் சேவித்துனைபணியவே
பழமைகொன்
கோரமடி நிறைந் தவன்குறை யறவே
கோவே புரிந்தாய் நீ—கோவே புரிந்தாய் நீ (பூ)

(2) காஹிரூர்க் கலங்கார கவிசெய்சப்துல் காதிரின்
னுவினிலுறை
யோக மருள்வீர் தைகாசாகி பொலிநாதா
போதாதோ சோதனே—போதாதோ சோதனே (பூ)

இம்—இந்துஸ்தான் தாளம்—ஏகம்

அன்னையும் தந்தையும் தானே என்றமெட்டு

பல்லவி

வள்ளல் பிறந்த தின்னாடே—காயல்
மன்ன னென்றேகவி மாலைகள் கூறும் (வள்)

அனுபல்லவி

ஈகையிலே புவிமீது இவர்க்கிணையுள ரென்பதர்க்
கேமுடியாது
சாகு முன்பும் செத்த பின்பும் ஈந்த
சாகரமானவனும் சீதக்காதி (வள்)

தொகைரு

(1) பாரினில் ஈயாத லோபி—பல்லோர்
இருந்ததனா லென்ன செத்தாலு மென்ன
காய்பகத் தொழுகும் தேனுகும்—நல்லோன்
மால்சீதக் காதி போற் பயனுமோ

அனுபல்லவி எடுப்பு

ஈகை யில்லாத மூதேவி—தப
யோகங்கள் செய்திட்ட போதிலும் பாவி
ஈகை யுளோன் இறைதோழன்—என்று
இயம்பிய நபிசொற் படிநடக் தோனுயர் (வள்)

தொகையரு

(2) தாய் மொழியாம் தமிழ்வாழ—நித்தம்
தடை யின்றியே பொருளீந்த சகாயன்
தாயினு மன்புமிகக் கொண்டே ஏழை
தாபங்கள் தீர்க்க வந்த பூமானும்

அனுபல்லவி எடுப்பு

நெல்லிடை பொன் கொடுத்தாலும்—அர்ப்ப
புல்லுங் கிட்டாகொடு பஞ்சத்தின் காலம்
உள்ளம் கலங்கிய ஏழைக் கஞ்சேல்
உதவுவே னென்றோடி வந்த உதாரன் (வள்)

தொகைரு

(3) செந்தமிழ் பாவிதைக் கூறும்—சாஹிப்
தம்பியின் மாதவ மான குமாரன்
செய்கப்துல் காதிரெனும் பேரன்—சொன்ன
சீமானும் சீதக் காதியைப் போலே

அனுபல்லவி எடுப்பு

உள்ளமுள்ளோர்ப் பலர் வேண்டும்--காஹிர்
ஊர்வளமும் புகழும் பெற வேண்டும்
தெள்ளிய ஞானங்கள் மீண்டும்--உற
துணைபுரிவாய் இறைவா நீஎஞ் ஞான்றும் (வள்)

28-வது மேளம்

இம்—கமாஸ் தாளம்—ஆதி

குளலோசை கேட்குதம்மா என்றமெட்டு

பல்லவி

சுடரோங்கும் தீபமடி
தீனோர்க ளுள்ளச் சுடரோங்கும் தீபமடி (சுட)

அனுபல்லவி

இகத்திலும் பரத்திலும் இன்புற மாக்களை
ஈடேற்ற வந்தபொற் பீடாதிபர் ஞான (சுட)

சரணம்

(1) மாதாவிடத் தமுதை மறுத்தார் மழலையிலம்
மாதமெல் லாம்விரத மெடுத்தார் புவியினிலே
வேதமெலி வைத்தீர்த்த மாதவ மானவர்க்கு
ஆதிநூலிட்ட பெயராம் முஹியித்தீன் ஞான (சுட)

(2) பாதம் சுமந்தொலிகள் பாக்யமிகவே பெற்றார்
பாரிலபூபக்க ரென்போர் மறுத்ததால் கெட்டார்
கூறுமவர் பணிந்ததாலே பின்னரு ளுற்றார்
கோரும்வரம் செய்கப்துல் காதிர்க்குதவும் ஞான (சுட)

45-வது மேளம்

இம்—பந்துவராளி தாளம்—ரூபகம்

நின்னே நெர நம்மி நானுற என்றமெட்டு

பல்லவி

என்னே நின தன்பிலா முறை
ஏ ராஜ பேோஜனே (என்)

அனுபல்லவி

புன்னகை வதனஸ்ரீ ரீம் , , , , ,
புண்யாக மபுருஷா (என்)

சரணம்

(1) மண்ணுடம் போடே உன்றன்
மாணேடி மறைந்ததோ
அன்றென் சிறை நீக்கிட
முன்னால் வந்தவனையா

(சிட்டா ஸ்வரம் அடிகடோறும் பாட)

நீஸ்ரிஸ் நீதயம கமபதபம காரிஸ
நிஸரிகாக ஸரிகமாம கமபத
நீஸ்ரிக்ரிஸ் நீதநிஸநீ தபமகரி கமபத (என்)

(2) சங்கம் சங்கமாய் திரு-சந்நீதானம் தேடியே
கங்கில்லா மறையோர் கவி-கணமேனிவனுறல் ஞாயமோ
(சிட்டா ஸ்வரம் பாடி பின்) (என்)

(3) தொல்லே நாளென் றந்தைக்குன்
பிள்ளை ஈந்த வரத்தால்
அல்லற் படலாகினேன்
ஐயா இதை அறியாயோ நீ
(சிட்டா ஸ்வரம் பாடி பின்) (என்)

(4) தஞ்ச மென்றோர்க் கருள்செய்
தைகா சாகிபொலியே
அஞ்சேலென் றன்போடுசெய்
கப்துல்காதி ரையாள்வாய்
(சிட்டர்பாடிப் பின்) (என்)

29-வது மேளம்

இம்—ஹம்ஸத்வனி   தாளம்—ஆதி

ஸ்ரீ ரகுகுல என்றமெட்டு

பல்லவி

நீபோய் சொல்லுவாய் எந்தன் நாதன்முன்னில்
நான் றேடியே நலிவதாய் விரைவில் (நீ)

அனுபல்லவி

பாரெங்கு முந்தன் பகலை வீசியே
பார்த்தென் முறையை பகருவாய் மதியே (நீ)

68080

சரணம்

(1) பலகோடி பக்தருளம் காத்திருக்க
பஃதாதிடம் போய் பள்ளிகொண்ட தேனே
தருமமாகுமோ வென்றகை தீர்க்குமோமா
தவராஜரிடத்திற் றூதாகவே மதியே (நீ)

(2) முன்னமொரு போதில் முஹியித்தீ னென்றென்னை
உன்னு ஓர்க்குதவி பண்ணுவே னென்றானே
இன்னும் செய்கப்துல் காதிரின் மையலன்றோ
மன்னவ னறியா தென்னமோ மதியே (நீ)

இம்—இந்துஸ்தான்காபி   தாளம்—ஏகம்

வள்ளிகணவன் பெயரை என்றமெட்டு

(மயில்கண்ணி)

பல்லவி

1) தெள்ளுதமிழ் வளர்த்த தேசிகன் சீதக்காதி
வள்ளல் மறைந்தானடி   மயிலே
வறுமை மிகுந்ததடி   (தெள்)

(2) தினங்கொடுத்தே சிறந்தோன் தென்காயலிற்
பிறந்தோன்
தனம்படைத் தோர்களிலே   மயிலே
தரும சொரூபனடி   (தெள்)

(3) நாட்டிற்புகழை நிலைநாட்டி ஏழைகட் கன்னம்
ஊட்டி வளர்த்ததிலே   மயிலே
உன்னத மானவண்டி   (தெள்)

(4) ஓர்தட்டுப் பொன்கொடுத்து ஓர்தட்டின் நெல்லைப்பெற்ற
நாரில்லா பஞ்சத்திலே   மயிலே
கைகொடுத் தாண்டவண்டி   (தெள்)

(5) மண்ணுக்குள்ளே மறைந்த பின்னும் கரத்தைநீட்டி
மாண்புற மோதிரத்தை   மயிலே
மாகவிக் கீந்தவண்டி   (தெள்)

(6) பாட்டை வளர்த்தபடி காசர்க்கும் பாவலர்க்கும்
நாட்டில்தமிழ் வளர்க்க   மயிலே
நன்கொடை தந்தவண்டி   (தெள்)

(7) லோபிகளிற் பலரை லோகமிழந் திட்டாலும்
பாபிகளுக் காகவே மயிலே
பரிதாபம் கொள்ளோமடி (தெள்)

(8) பொன்னை தானம்புரிந்து பொற்கரங்கள் சிவந்த
மன்னன் சீதக்காதியை மயிலே
மறக்க முடியாதடி (தெள்)

(9) யன்னன் பிறந்தகாயல் மஜ்லிசுல் கெளதோரைப்போல்
நன்னயமாய் வள்ளலின் மயிலே
நாளைக் கொண்டாடுவோண்டி (தெள்)

(10) செந்தமிழ் மாலைஇதை சீதக்காதி துரைக்காய்
சிந்தைமகிழ்ந் தளித்தான் மயிலே
செய்கப்துல் காதிரடி (தெள்)

20-வது மேளம்

இம்—பைரவி தாளம்—ரூபகம்

உபசாரமு ஜேசேவா என்றமெட்டு

பல்லவி

அபராத மென் செய்தேனோ
ஐயா வென துளமறிய (அ)

அனுபல்லவி

உபமான ரகித போதா
ஊர்ச்சிதப்பட உரைத்தல் வேண்டும் (அ)

சரணம்

(1) ஆரணத்தை யவமதித்தே ஆங்காரத்தா லென்னுயுளே
பூரணமாய் வீணாக்கினேனோ பூவில்காதன் நானோ
நேரானகற் புளமாதரின் நேமமதிற் றவற்செய்தேனோ
சோர்வோங்கு மெளியோர்களை சோகாக்கினியி
லாழ்த்தினேனோ (அ)

(2) காமில்உம ரொலிசுதனே கனகாம்புஜ மலர்ப்பாதனே
நேமிக்கரை யூரில்வாசனே நேசம்வைத் தாள்ஒனே
பூமிமீதிற்றன் ருய்ப்பிள்ளையை பூரியடித் தாலும்விட்டுப்
போகாதே யதுபோலேநீ போவென் றுகைத்
தாலும்போகேனே (அ)

(3) செல்வமிளிருயர் காஹிர்வாழ் செய்கப்துல்காதி
ரென்கோனே
சேமப்பொருளீ வாய்சீமானே சேவிகஞ் செய்தேனே
செய்கப்துல்காதி ரெனுமுன்றன் சேமாக்குவயன்
நாணுதலால்
கைசோய்ந்தென் கவலையறக் காலமிதே கருணாகரா (அ)

28-வது மேளம்

இம்—கதனகுதூகலம் தாளம்—ஆதி

கதனகுதூகல ராகப்பிரியஎன்றமெட்டு

பல்லவி

வரந்தரவே வரவேணுமையே
வயல்சூழ் பொன்னகை வளர்ஷா ஹொலியே (வரந்)

அனுபல்லவி

அருந்தாமலுன் னருளமுதை
இருந்தாவ தென்ன இன்பமோர் இப்பாரில் (வரந்)

சரணம்

(1) சிந்தின் மேலோர்யானம் பொருந்து முந்தியானம்
முந்தவே கார்மானம் வந்ததார் செய்தானம்
விந்தையோ மைந்தன் வினை தீர்ப்பதும்
விண்ணவர் துதிக்கு மண்ணலே விரைவில் (வரந்)

சிட்டா சாஹித்யம

பூரணமாகிய காரண ஞான தயாநிதியே
மணிநகர் ஹஸன் குத்து சருள்
மகவுன தடிபணி விதரணமொடு உயர்நிதிபெற
விரும்பும் செய்கப்துல் காதிர்க் குதவும்நல் (வரந்)

இம்—இந்துஸ்தான் தாளம்—ஏகம்

துனிய ரெங்கரெங்கேலி என்றமெட்டு

பல்லவி

செதியா ரம்புஜ தீரா வீரா
செதியாரம்புஜ தீரா (செதி)

அனுபல்லவி

சோதனை யேனிரு விழிநடு விலங்கும்
சோபிதப் புரீதம்தருவாய்
சருவமகைள சாதுதைகா சாஹிபே உமரொலிபாலா
சரணபங்கஜத்தா ளோர் துளிபடில்
சதா சிதம்பெறல் மலையே ஒலியே (செதி)

சரணம்

(1) மதுகர் வினமலர்ப் பூக்கா வினிலே
மாமனோகர மாய்மதுவை
இதமா யமுது கொண்டிசை பாடும்—கர
ரிதுபோலேயுன தலர்வனத்தே
பதமாய் யமர்ந்தருந் தகவாம் தேனே
பரிந்தே கேட்கு மெளியோர்க் கொலியே (செதி)

(2) செந்தமிழ் வளர்பூங் காஹிரின் தவமே
செய்கப்துல் காதிரின்பகமே
சேரனூ ரேனுதி பிணியை
செவ்வையுறச் செய்தாயகமே
சந்தத முனையே சிந்திக்கு மடியேன்
சகலல்க லோட்டி யருள்வீ ரொலியே (செதி)

20-வது மேளம்

இம் - பைரவி   தாளம்—ஆதி

ஸ்ரீ ரகுவர என்றமெட்டு

பல்லவி

நீதயை புரிந் தருள்வாய் நயா ஜெயா
நகை நிக ழானனு சகாயகுணு (நீ)

அனுபல்லவி

தீராவென் கிலேசம் சீராகவே காஹி
சூரா உமரொவி சதா மகிழ்சுதனே (நீ)

சரணம்

(1) மாதவ மேலா மகத்துவ நூலா
வேதன மிகுமகிபா வென்றுய ரகற்ற (நீ)

(2) பார்க்கவன் ரூறும் பவப்பிணி தீரும்
ஆக்கமுயர் மக்கத் திலேக னஞ்சலித்தவா (நீ)

(3) சாகரத் தோரன் சங்கீத மாரன்
சேகரம் செய்கப்துல் காதிர்க் கதிகமுற (நீ)

இம்—இந்துஸ்தான் தாளம்—ஏகம்

மேரி மாதாகி சர்பர் தாஜரஹே என்றமெட்டு

பல்லவி

எங்கள் நாதவின் சுகிர்த நன்னாளிதுவே
நாளிதுவே...நாளிதுவே (எங்)

அனுபல்லவி

நறை கமழ் பகிபூங் காஹிரிலே
நவமா நிதியாம் தைகா சாகிபுவின்
நந்தா வனஞ்சூழ் தருகா சிறப்பை
நடந்து போய் பார்க்கநீ வாமயிலே (எங)

சரணம்

(1) துவஜா லங்கிர்த விநோத் மிதோ
துவிரத மேற்பயம் அதோ அதோ
துதிபாடும் விசாரத ரிசை கானம்
தொனிக்கிது காதினி லதிசுக ஞானம் (எங்)

(2) செஙகோல் புரி வேந்தர்கள் போற்றும்பதம்
செய் கப்துல் காதிரின்பா வமிர்தம்
பொங்கும் மறையோர்கள் தொண்டாடும் சிதம்
புநிதமான் யருளும் சகியே நிதம் (எங்)

இம்—இந்துஸ்தான் தாளம்—ஏகம்

மனுகி ஆன்கிகோல் என்றமெட்டு

பல்லவி

மனக்கண் ணேக்கருள்வீ ரென்னுதா (மன)

அனுபல்லவி

எனக்காதலே யாரேக சுபாவா எந்தெழில்
சேரும ரொவி சுதனேவா
எண்மை தீராய் வன்மை தாராய்
எந்திசை சீரீந்தின்னுளி லேஜெயந்தருவீ ரென்னுதா (ம)

சரணம்

(1) செந்தில் தளிக்கொரு பதிகன் கொண்டேகும்
செம்மறியை பிரியத்தொடு கேட்கும்
சிந்தைக் கிசையாச் செலவிக்ரகமும்
சென்றவர்க்கே கொடு போவெனக் கூறிடச்
செய்த செழுஞ்சுடரே என்னுதா (மன)

(2) கவலே மிகைத் தகத்துயர் மாதிரம்போல்
கனிகர மிதையா எனைச் சூழ்ந்ததனுல்
கதிநீ என்றே கழல் பெறவின்றே
கருதிடும் செய்கப்துல் காதிர்க்கிணை தைகா சாகிபவே
தருவீ ரென்னுதா (மன)

இம்—இந்துஸ்தான் தாளம்—ஏகம்

தெரிகடரிமலாகா என்றமெட்டு

23B
1-75

பல்லவி

நலை வளஞ்சேர் புரிவா ழென்னாயக
ராஜசுதா ...ராஜசுதா—உயர் (ராஜ)

அனுபல்லவி

ஆப்தவிரதா அதிகாரனு அம்புஜதிரேகா மதிபூரனு
பாபகமீறு துன தருள் கூறாய்
பாதிபருமரொலி சேயென்னாயக (ராஜ)

சரணம்

(1) சேரனந் நாடார சாளிறை துணைவன்
சேவித்தோன் நாகமணி யெனு மொருவன்
கோரி டவன்குஷ்ட ரோகம் தீர்த்தாய்
கோதிலா திருவே—என்னாயக (ராஜ)

(2) பாரிலுமை னைதகா சாகிபென்பார் பலர்
பணிவொடு செய்கப்துல் காதிரென்போர் சிலர்
கூறுமிக்கவி கபிதான முன்பே ரவர்
குறைகடீர்ப்ப தெப்போ—என்னாயக (ராஜ)

28-வது மேளம்

இம்—செஞ்சுருட்டி தாளம்—ஏகம்

செந்தூர் வேலாண்டி என்றமெட்டு

பல்லவி

சிந்தாகுலம் தாண்டி ஜீவ
சேமம் பெறலாண்டீ—வேண்டிதனம் (சிந்)

அனுபல்லவி

கந்தங்கமழ் காரு கண்யன்
கன்ம மகற்றும் புண்யன்
கற்பக முற்பன மேவிய சாகுரு
பொற்பத சேவை புரிந்தவர் கேயுறும் (சிந்)

(மகுடம்)

கருமகர்த்த ருமரொலியின் புத்ரரடி
ஒருமனத்தோடெவர் கருதினு மவர்க்குறும் (சிந்)

(மகுடம்)

கனக ரத்னமணி இலகும் நகர்க்கதி
பதியாம் காஹிர்வைத காசாகிபுன் னவர்குறும் (சிந்)

சரணம்

(1) நந்திக்கனு வளித்தோர் நான்மறைப் பொருளுற்றோர்
நானும வரின் திரு நாமம தர்க்குரித்
தானவ னுதவினலே யெனக் குமுறும் (சிந்)

(2) மச்சப் புலாலையொரு மங்கையர்க் கூட்டித்திரு
எச்ச மளித்தவ ரிச்சண மென்றுயர்
நிச்சயம் நீக்குவாரென நினைப்பவர்க்குறும் (சிந்)

(3) செய்கப்தூல் காதிரின்சொல் செந்தமிழ் கீதங்களில்
மைகளடர்ந்து விடாதரு ளூட்டிடும்
மெய்த்தவ ராஜரை மேவிடு பவர்க்குறும் (சிந்)

பிரசித்திபெற்ற

வெள்ளி ஆபரணமும்

நவீன கற்களும்

எங்களிடம் கிடைக்கும்.

எஸ் பி. ஹபீபிய்யா ஜெம்ஸ்,

238, கோவிந்தப்ப நாயகன் தெரு,

ஜி. டி. மதராஸ்.

கெட்டிச் சாயத்திற்கும்

உறுதியான நாலுக்கும்

உத்திரவாத முள்ளது

K.M.S. மார்க்கு

லுங்கியே

ஒருமுறை வாங்கினால் உண்மை

தெரியும்.

K. M. S. MOHAMMED MOHIDIN & BROS.,

196, Angappa Naick St., G. T. MADRAS

ESTD. 1943.
کولمبو کیاپ اسٹورس مدراس
COLOMBO CAP STORE
TRADE MARK
கொளம்பு கேப் ஸ்டோர்.
A. A. AZEEZ & Co.
206, ANGAPPA NAICK ST.
G. T. MADRAS.
A. A. அஜீஸ் & கோ
206, அங்கப்பநாயகன் தெருவு
G. T. மதராஸ்

سیلون کیاپ مارٹ
منڈی جی ٹی مدراس
THE
CEYLON
CAP MART
PROP. S.K.AJEEBA
CAP MANUFACTURER. ESTD. REGISTERED
WHOLESALE RETAIL 1937 TRADE MARK
தி. சிலோன் கேப் மார்ட்
No. 83
மண்ணாடி தெரு
ஜி.டி. மதராஸ்
No. 83
MANNADY STREET
G T MADRAS.

Mamoo Modern Stores & Cool Drink Shop

OUR SYRUPS a Speciality

Use Always Our **"TIGER BRAND"**

REGISTERED No. 2212

Proprietor: **R. ABDUL WAHAB SAHIB,**

3-56, Mannady St., G. T. MADRAS

உங்களுக்கு எதுவேண்டும்

நவீனகாலத்திற் குரிய சிறந்த பலவகை பொன்னமூத்திய அழகிய வெள்ளி ஆபரணங்கள் பேன்ஸி வளையல்கள், பேன்ஸி காதணி தினுசுகள் 9-காரட் உத்திரவாதமுள்ள தங்க நகைகளும், ஜாதி (கல்ச்சர்) முத்துக்கள், ஜாதி நவரத்தின கற்கள் (**Birthday Stone**) உயர்ந்த ரங்கூன் வைரங்கள், மேல்நாட்டு பேன்ஸி கற்கள், இதர எல்லாவகை கல் தினுசுகளும் எங்களிடம் கிடைக்கும்.

குறிப்பு :—ஆர்டருக்கு தங்க நகைகள் சிறந்த முறையில் குறித்த காலத்தில் செய்து தரப்படும்.

பேன்ஸி ஜுவலரி மார்ட்,
2, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்.

AN OPPORTUNITY

FOR DEALERS IN

LUNGHI & HANDLOOM FABRICS

We stock most modern, latest stylish and colourful lunghis and Hand-loom Fabrics. In addition to the superiority of our stock we offer special wholesale rates.

HEAD OFFICE:—

Obaid Trading Co.,

56/12, Lower Chitpur Road, CALCUTTA.
Telegrams: "OBYTRADERY"

BRANCH AT

95, Linghi Chetty Street, G. T. Madras.
Telegrams: "KHOSROJ"

மஜ்லிஸுல் கௌதின் நோக்கம்

அன்புமிக்க அறிஞர்களே!

திருநெல்வேலி ஜில்லா காயல்பட்டணத்தில் கி. பி. 1941ஆ மஜ்லிசுல்கௌது என்ற பெயரால் ஓர் சங்கத்தை ஸ்தாபித்துள்ளோம்.

அச்சங்கத்தின் நோக்கம்.

நமது நாயகம் கௌதுல் அஃலம் முஹிய்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரவி) அவர்களதும், அந்நாயகத்தின் பக்தசிரேஷ்டரும், ஜாதி மத பேதமின்றி மாந்தர்களின் அறிவு வளர்ச்சியும் பசிப் பிணியைத் தீர்ப்பதுமே தனது ஒப்பற்ற கடமையெனக் கருதி பணியாற்றிப் புகழுடம்பழியாது திகழும் நம் காயல்பட்டணம் கொடைவள்ளல் சீதக்காதி என்ற செய்கப்துல்காதிர் மரைக்கார் அவர்களதும், உயர் திருச்சேவைகளை பிரதி வருஷமும் கொண்டாடி மக்களுக்கு ஞாபகப்படுத்துவதும்.

அப் பெரியார்கள் செய்துள்ள பெருஞ் சேவைகளில் முக்கியத்துவம் நிறைந்த கலை வளர்ச்சியை புதிதாய் இஸ்லாத்தைத் தழுவும் நம் சகோதரர்களுக்கு அளித்து, அவர்களை அறிவிலும ஆற்றலிலும் சிறந்த இஸ்லாமிய வீரர்களாக்குவதர்க்கான சகல உதவிகளையும செய்து இப் புனித இயக்கத்தை நாடெங்கும் பரப்பி பணிசெய்வதுமேயாகும்.

இச்சிறந்த சேவையை என்றுமழியாத முறையில் அமைக்க ஓர் கட்டிடமும், பல சொத்துகளும் அவசியமாதலால்; இவ் வருஷம் சீதக்காதி அனாதை ஆசிரம நிதி என்ற ஓர் பெருந் திட்டத்தை வகுத்து நிதி திரட்டுவதென்று தீர்மானித்துள்ளோம். இந்நிதிக்கு முதல் முதலாக சன்மார்க்க சாஹித்யாலங்காரமென்ற இவ்வரிய நூலை இயற்றி தந்துதவிய நம்பாவலர் S. S. அப்துல்காதிர் அவர்களுக்கும், கட்டிடம் கட்டுவதர்க்கும்,

ஐந்து வருஷங்களாக இவ் விழாவை விமரிசையாய் நடத்த தாராளமாய் உதவிய அன்பர்களுக்கும் எங்களன்பான வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்பர்களே!

இத்தகைய உயர் சேவைகளுக்கு உங்களின் சகாயத்தை உள்ளங்கனிந்து தாராளமாய் உதவுமாறும் ஒவ்வொரு கிராமவாசிகளும் அவரவர் கிராமங்களில் புதிய இஸ்லாமிய சகோதரர்களின் கல்வி அபிவிருத்திக்காக நிதி திரட்டி பல ஸ்தாபனங்களையும் நிறுவி உதவும்படிக்கு மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளும்,

தங்களன்புள்ள,

மு. க. இ. முகிய்தீன் இபுறாகீம், B.A ,B.L.

சென்னை கிளை ஸ்தாபனத் தலைவர்.

M. K. திரு முகிய்யித்தீன்,

ஷை காரியதரிசி.

வ. உ. அப்பாஸ்,

தலைமை ஸ்தாபனத் தலைவர்.

M. K. முகம்மது ஷம்சுதீன்,

ஷை காரியதரிசி.

காயல்பட்டணம்,
1946 } மஜ்லிசுல் கெளது.

இந்த புத்தகம் தேவையுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

மஜ்லிசுல் கெளது,

2, பவழக்காரத் தெரு, சென்னை.

☞ பிழை திருத்தம் :— 6-வது பக்கம், 13-வது வரியில் சோபிதானன ‘குப்ன்’ என்றதை ‘ரூபன்’ என்று திருத்திப் பாடவேண்டியது.

அட்டவணை

பாட்டின் தலைப்பு பக்கம்

லோகமனைத்தையும் 5
ஜெயமளித்தான் 6
நீரல்லாதுலக 8
மன்னவா 9
சொல்லுவீர் 10
மக்காஸ்தலம் 11
பூமலர்ச் செறியுறும் 12
தருணமீதையா 13
தேடுகிறேன் 14
எங்கள் நயினர் 15
ஐய்ன் பாதத்தை 16
வயது மூன்ருன 17
நாடின வரம்தர 18
ஆதாரமார் தேவ 19
பூரணம் பொலிந்த 20
வள்ளல் பிறந்த 21
சுடரோங்கும் 23
என்னே நின 24
நீ போய் சொல்லுவாய் 25
தெள்ளுதமிழ் 26
அபராதமென் 28
வரந்தரவே 29
கெதியா ரம்புஜ 30
நீதயைபுரிந் 31
எஙகள்காத 32
மனக்கண் 33
கலை வளஞ்சேர் 34
சிந்தாகுலம் 35

68080.

Ganan Press, Madras—I.C. No.M.S. 199—26-3-46—1000 C.

A. MOHAMED HASSAN

8, Mannady Street
G.T. MADRAS

THE HOUSE OF POPULARITY
for

HAND-LOOM LUNGIES

Wholesale & Retail Dealer.

ALWAYS Wear

"ASKARI SARONGS"

(FASTE COLOUR)

TRADE MARK

FINER **ASKARI** QUALITY

80 x 80

உத்திரவாதமுள்ள கெட்டிச்சாய
அஸ்கரி மார்க்கு லுங்கிகளை
எப்பொழுதும் உடுத்துங்கள்.